DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | **பூங்கொடி (Pw.18 )** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of March 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது நத்தகுளத்தில் வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 13வருடங்களுக்கு முன்பு தமிழ்பாடிக்கு ஒரு வேலையாக வந்துவிட்டு ஊருக்கு செல்வதற்காக தமிழ்பாடியில் இருந்து திருச்சுழி வந்து இறங்கி எனது ஊருக்கு செல்வதற்காக மாலை 3.30மணியளவில் நத்தகுளம் அரசு பேருந்தில் நாங்கள் சென்ற பேருந்து திருச்சுழியைத்தாண்டி சென்று கொண்டிகொண்டிருந்தபோது சாமிநத்தத்திற்கும் பனையூருக்கும் நடுவே சென்றபோது 3.45மணிக்கு நாங்கள் சென்ற பேருந்து மேற்கில் இருந்து

கிழக்கு நோக்கி சென்றபோது எதிரே கிழக்கில் இருந்து மேற்காக லாரி வேகமாக வந்து நான் சென்ற பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. எனக்கு இடது கண் புருவத்தில் காயமும், கால்களில் லேசான காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்தவர்களுக்கு 30 நபர்களுக்கு மேல் காயம் ஏற்பட்டது. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 15 நாட்கள் சிகிச்சையில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் சென்ற பேருந்தின் நடந்துநர் 3 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

எனக்கு இடது கண்ணில் காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் வாகனங்கள் அனைத்தும் ரோட்டின் இடதுபுறமாக தான் சென்றது என்றால் இரத்தம் வந்ததால் நான் மயங்கிவிட்டேன். பேருந்தும் லாரியும் மோதி எனக்கு காயம் ஏற்பட்டவுடன் தான் விபத்து நடந்தது எனக்கு தெரியும் என்றால் சரிதான். ரோட்டில் பேருந்தும், லாரியும் எங்கு நின்றது என்று நான் பார்த்தேனா என்றால் நான் மயங்கிவிட்டேன். என்னுடன் பேருந்தில் அருகில் வந்தது யார் என்றால் பாக்கியம் வந்தார். விபத்திற்கு காரணம் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவா அல்லது லாரி ஓட்டுநரின் கவனக்குறைவா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொன்ன நாள் நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ஜெயக்கொடி (Pw.15 )

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of March 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது நத்தகுளத்தில் வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 13வருடங்களுக்கு முன்பு திருச்சுழி சாமான்கள் வாங்குவதற்காக வந்தேன். எனது ஊருக்கு செல்வதற்காக மாலை 3.30மணியளவில் நத்தகுளம் அரசு பேருந்தில் நாங்கள் சென்ற பேருந்து திருச்சுழியைத்தாண்டி சென்று கொண்டிகொண்டிருந்தபோது சாமிநத்தத்திற்கும் பனையூருக்கும் நடுவே சென்றபோது 3.45மணிக்கு நாங்கள் சென்ற பேருந்து மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றபோது எதிரே கிழக்கில் இருந்து மேற்காக லாரி

வேகமாக வந்து நான் சென்ற பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. நான் பேருந்தின் நடு இறுக்கையில் உட்கார்ந்திருந்தேன். எனக்கு இடது பக்க நெற்றி, வலது கால் மொலி ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்தவர்களுக்கு 30 நபர்களுக்கு மேல் காயம் ஏற்பட்டது. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 15 நாட்கள் சிகிச்சையில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். நடத்துனர் கண்ணாடி உடைந்து கீழே விழுந்துவிட்டார். நான் சென்ற பேருந்தின் நடந்துநர் 3 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

டம் என்று சத்தம் கேட்ட பின்னர்தான் விபத்து பற்றி தெரியும் என்றால் பேருந்து இடதுபுறமாக சென்றது, லாரி தான் வந்து மோதியது. பேருந்து ஓட்டுநருக்கு என்ன காயம் எனக்கு தெரியுமா என்றால் காலில் அடிபட்டது. நடத்துனருக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பேருந்து இடதுபுறம் ஓரமாக நின்றது, லாரி எதிரில் ஹாரன் அடிக்காமல் வந்து மோதிவிட்டது. பேருந்தின் ஓட்டுநரும் ஹாரன் அடிக்கவில்லை என்றால் சரிதான். இரு வாகனத்தின் ஓட்டுநர்கள் பெயர்கள் தெரியாது என்றால் சரிதான். சொன்ன நாள் நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : முத்துஇருளாயி (Pw.17 )

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of March 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது நத்தகுளத்தில் வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 13வருடங்களுக்கு முன்பு எனது தங்கை அருப்புக்கோட்டையில் உள்ள அமர் மருத்துவமனையில் இருந்து அவரை எனது ஊருக்கு அழைத்து வருவதற்காக அவரையும் அழைத்துக் கொண்டு நத்தகுளம் அரசு பேருந்தில் அருப்புக்கோட்டையில் 2.50மணியளவில் பேருந்தில் ஏறினேன். நாங்கள் சென்ற பேருந்து திருச்சுழியைத்தாண்டி சாமிநத்தத்திற்கும் பனையூருக்கும் நடுவே சென்றபோது 3.30மணிக்கு

மேல் நாங்கள் சென்ற பேருந்திற்கு எதிரே கிழக்கில் இருந்து மேற்காக லாரி வேகமாக வந்து நான் சென்ற பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. நான் ஓட்டுநர் சீட்டிற்கும் பின்னால் உட்கார்ந்திருந்ததால் டிரைவரின் இருக்கையின் பின்னால் இருந்த கம்பிக்குள் எனது கால் மாட்டிக் கொண்டது. 3 மணி நேரம் கழித்துதான் என்னை கம்பியை வைத்து நெம்பி என்னை பேருந்தை விட்டு கீழே இறக்கினார்கள். எனக்கு இடது பக்க நெற்றி, வலது கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்தவர்களுக்கு 35 நபர்களுக்கு மேல் காயம் ஏற்பட்டது. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 20 நாட்கள் சிகிச்சையில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுபடியும் கமுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் 20 நாட்களுக்கு மேல் சிகிச்சையில் இருந்தேன். நான் சென்ற பேருந்தின் நடந்துநர் 3 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

பேருந்தில் பயணம் செய்யும் போது தூங்கி கொண்டு வந்தேன் என்றால் சிறிது நேரம் தூங்கினேன். பேருந்தும், லாரியும் மோதியதால் தான் முழித்து பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் கம்பியில் மாட்டிக்கொண்டு விட்டேன். சிறிதுநேரம் கழித்து தான் என்னை காப்பாற்றினார்கள். விபத்திற்கு முன்னர் பேருந்து மெதுவாகத்தான் சென்றது, லாரி ஓட்டுநர் தான் வேகமாக வந்து மோதிவிட்டார். விபத்து நடைபெற்றவுடன் அந்த ரோட்டில் வாகனங்கள் இடதுபுறமாகதான் சென்றதா என்றால் இடதுபுறம் செல்ல முடியாது, பேருந்து ஓட்டுநர்

இடதுபுறமாக தான் பேருந்தை நிறுத்தியிருந்தார். நான் சொல்வது போல் எதிரியின் கவனக்குறைவினால் தான் விபத்து நடைபெற்றதா என்றால் எனக்கு தெரியாது. இரண்டு வாகனத்தின் எண்களும், ஓட்டுநர் பெயர்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொன்ன நாள் நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ஆனந்தவள்ளி (Pw.13 )

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of March 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது நத்தகுளத்தில் வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 13வருடங்களுக்கு முன்பு திருச்சுழிக்கு சாமான்கள் வாங்க வந்துவிட்டு பின்பு எனது ஊருக்கு செல்வதற்காக மாலை 3.30மணியளவில் திருச்சுழியில் எனது ஊருக்கு செல்லும் நத்தகுளம் அரசு பேருந்தில் ஏறினேன். என்னுடன் சேதுபுரம், குழலிகுளம், நெடுகநேந்தல், பனையூர், ஆனைகுளம், அம்மன்பட்டி, ரெகுநாதமடை ஆகிய ஊர்களை சேர்ந்தவர்கள் பேருந்தில் ஏறிச் சென்றோம். நாங்கள் சென்ற பேருந்து

சாமிநத்தத்திற்கும் பனையூருக்கும் நடுவே சென்றபோது 3.40மணியளவில் நாங்கள் சென்ற பேருந்திற்கு எதிரே பனையூரிலிருந்து வந்து கொண்டிருந்த லாரி வேகமாக வந்து நான் சென்ற பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. அதனால் நான் மயக்கம் அடைந்துவிட்டேன். எனக்கு கீழ்தாடையில் 3 பற்கள் உடைந்துவிட்டது. தலையில் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்தவர்களுக்கு 40 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 15 நாட்கள் சிகிச்சையில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். பேருந்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் இடதுபக்கம் உட்கார்ந்திருந்தேன். எனக்கு முன்னால் 10, 20 பேர் நின்று கொண்டிருந்தார்களா என்றால் இல்லை, யாரும் நிற்கவில்லை. இரண்டு வாகனமும் மோதிய பின்னர் தான் விபத்து என்பது தெரியும் என்றால் சரிதான். இரத்தம் அதிகமாக வந்ததால் நான் மயங்கிவிட்டேன். அதன்பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. விபத்திற்கு பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. லாரியின் பெயர் ஓட்டுநர் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொன்ன நாள் நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : பாக்கியம் (Pw.14 )

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of March 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது நத்தகுளத்தில் வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 13வருடங்களுக்கு முன்பு தமிழ்பாடிக்கு எனது மச்சான் மகனுக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவரிடம் சிகிச்சை எடுப்பதற்காக மருத்துவரிடம் காண்பித்துவிட்டு தமிழ்பாடியில் இருந்து திருச்சுழிக்கு நரிக்குடி பேருந்தில் ஏறி திருச்சுழியில் இறங்கி எனது ஊருக்கு செல்வதற்காக மாலை 3.30மணியளவில் திருச்சுழியில் எனது ஊருக்கு செல்லும் நத்தகுளம் அரசு பேருந்தில் ஏறினேன். என்னுடன் சேதுபுரம்,

குழலிகுளம், நெடுகநேந்தல், பனையூர், ஆனைகுளம், அம்மன்பட்டி, ரெகுநாதமடை ஆகிய ஊர்களை சேர்ந்தவர்கள் பேருந்தில் ஏறிச் சென்றோம். நாங்கள் சென்ற பேருந்து சாமிநத்தத்திற்கும் பனையூருக்கும் நடுவே சென்றபோது 4.00மணியளவில் நாங்கள் சென்ற பேருந்திற்கு எதிரே பனையூரிலிருந்து வந்து கொண்டிருந்த லாரி வேகமாக வந்து நான் சென்ற பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. அதனால் முன்பக்க கண்ணாடி உடைந்தவுடன் நடந்துநர் பேருந்தை விட்டு கீழே விழுந்துவிட்டார். எனக்கு இடது கை மொலி மற்றும் இடது கண் புருவம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்தவர்களுக்கு 40 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 10 நாட்கள் சிகிச்சையில்இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் சென்ற பேருந்தின் நடந்துநர் 2 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். ஆஜர் எதிரிதான் நான் சென்ற பேருந்தில் மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி –

எனக்கு எழுத படிக்க தெரியாது. பேருந்து ஓட்டுநர் பெயர் எனக்கு தெரியாது. அடையாளம் தெரியும். அந்த பேருந்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 60, 70 பேர் இருந்தார்கள். அந்த பேருந்தில் பயணிகள் நின்று கொண்டிருந்தார்களா என்றால் நின்று கொண்டிருந்தார்கள். எனக்கு முன்னாலும், பின்னாலும் நின்று கொண்டிருந்தார்கள். பேருந்தில் இருந்ததால் ரோட்டின் அளவு தெரியாது

என்றால் சரிதான். நான் பேருந்தில் இருந்ததால் ரோட்டில் எந்தபக்கம் விபத்து நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் இடது கை பக்கம் தான் விபத்து நடந்தது. நான் இறங்கி விபத்தினை பார்த்தேனா என்றால் நான் மயங்கிவிட்டேன். நான் இறங்கி பார்த்திருந்தால் விபத்து எந்தபக்கம் நடந்திருக்கும் என்று எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. லாரி எதிரில் வரும்போது ஆடி சரிந்து வந்ததா என்றால் நேராக வேகமாக வந்தது. லாரியின் ஓட்டுநர் பெயர் எனக்கு தெரியாது. லாரியின் பெயர் எனக்கு தெரியாது. சொன்ன நாள் நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : மணியமுதா (Pw.11 )

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of March 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது நத்தகுளத்தில் வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 13வருடங்களுக்கு முன்பு திருச்சுழிக்கு ஒரு வேலையாக வந்துவிட்டு எனது ஊருக்கு செல்வதற்காக மாலை 3.30மணியளவில் திருச்சுழியில் எனது ஊருக்கு செல்லும் நத்தகுளம் அரசு பேருந்தில் ஏறினேன். என்னுடன் சேதுபுரம், குழலிகுளம், நெடுகநேந்தல், பனையூர், ஆனைகுளம், அம்மன்பட்டி, ரெகுநாதமடை ஆகிய ஊர்களை சேர்ந்தவர்கள் பேருந்தில் ஏறிச் சென்றோம். நாங்கள் சென்ற பேருந்து சாமிநத்தத்திற்கும்

பனையூருக்கும் நடுவே சென்றபோது 3.45மணியளவில் நாங்கள் சென்ற பேருந்திற்கு எதிரே பனையூரிலிருந்து வந்து கொண்டிருந்த லாரி வேகமாக வந்து நான் சென்ற பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. அதனால் முன்பக்க கண்ணாடி உடைந்தவுடன் நடந்துநர் பேருந்தை விட்டு கீழே விழுந்துவிட்டார். எனக்கு இரண்டு கால்முட்டியில் ஊமைக் காயம் ஏற்பட்டது. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 14 நாட்கள் சிகிச்சையில்இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் சென்ற பேருந்தின் நடந்துநர் 2 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். ஆஜர் எதிரிதான் நான் சென்ற பேருந்தில் மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

அந்த பேருந்தில் 50, 60 பேர் இருந்திருப்போமா என்றார் இருந்திருப்போம். நான் முன்னால் அமர்ந்திருந்தேன். நான் பேருந்தின் வலதுபுறம் அமர்ந்திருந்தேன். ஒரு நாளைக்கு அந்த ஊர்களுக்கு 2 முறை தான் பேருந்து வசதி உள்ளது என்றால் சரிதான். 7, 8 ஊர்மக்கள் அந்த பேருந்தில் தான் செல்வார்கள் என்றால் சரிதான். டம் என்று சத்தம் கேட்ட பிறகு தான் விபத்து நடந்தது எனக்கு தெரியும் என்றால் இல்லை, எதிரில் லாரி வரும்போது நாங்கள் பார்த்தோம். எதிரில் எத்தனை லாரி வந்தது என்றால் ஒரு லாரிதான் வந்தது. அந்த லாரியின் பெயரை பார்த்தேனா என்றால் இல்லை. அந்த லாரிக்கு எந்த பகுதியில் சேதம் என்று நான் பார்க்கவில்லை. பேருந்தில் எந்த பகுதியில் சேதம் என்றால் முன்பக்கம்

முழுவதும் நொறுங்கியிருந்தது. லாரி ஓட்டுநரின் பெயர் எனக்கு தெரியாது. லாரியின் ஓட்டுநரை நான் பார்த்தது இல்லை. என்னை போலிசாரை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அவரது பெயர் எனக்கு தெரியாது. அந்த பாதை ஒருவழிப்பாதை என்றால் வாகனங்கள் மெதுவாகத்தான் செல்லும் என்றால் சரிதான். பேருந்தின் ஓட்டுநர் ஹாரன் அடித்தாரா என்றால் இல்லை. எதிரில் வந்த லாரி ஹாரன் அடித்ததால் தான் அந்த லாரியை பார்த்தேனா என்றால் ஆமாம். விபத்திற்கு காரணம் நான் பயணம் செய்த ஓட்டுநர் தான் காரணம் என்றால் சரியல்ல. குறுகிய பாதை என்பதாலும், எதிரி சரக்கு வாகனத்தை ஓட்டியதாலும் மெதுவாகத்தான் வந்தார் என்றால் சரியல்ல. பேருந்தில் அதிக பேருக்கு காயம் ஏற்பட்டதாலும், பேருந்தின் நடத்துனர் இறந்துவிட்டதாலும் அவர் எதிரி மீது இழப்பீடு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ஜக்கம்மாள் (Pw.16 )

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of March 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது நத்தகுளத்தில் வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 13வருடங்களுக்கு முன்பு திருச்சுழிக்கு ஒரு வேலையாக வந்துவிட்டு எனது ஊருக்கு செல்வதற்காக மாலை 3.30மணியளவில் திருச்சுழியில் எனது ஊருக்கு செல்லும் நத்தகுளம் அரசு பேருந்தில் ஏறினேன். என்னுடன் சேதுபுரம், குழலிகுளம், நெடுகநேந்தல், பனையூர், ஆனைகுளம், அம்மன்பட்டி, ரெகுநாதமடை ஆகிய ஊர்களை சேர்ந்தவர்கள் பேருந்தில் ஏறிச் சென்றோம். நாங்கள் சென்ற பேருந்து சாமிநத்தத்திற்கும்

பனையூருக்கும் நடுவே சென்றபோது 4.00மணியளவில் நாங்கள் சென்ற பேருந்திற்கு எதிரே பனையூரிலிருந்து வந்து கொண்டிருந்த லாரி வேகமாக வந்து நான் சென்ற பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. அதனால் முன்பக்க கண்ணாடி உடைந்தவுடன் நடந்துநர் பேருந்தை விட்டு கீழே விழுந்துவிட்டார். எனக்கு இடது பக்க நெற்றியில் காயம் ஏற்பட்டது. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 15 நாட்கள் சிகிச்சையில்இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் சென்ற பேருந்தின் நடந்துநர் 2 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். ஆஜர் எதிரிதான் நான் சென்ற பேருந்தில் மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரு வாகனத்தின் ஓட்டுநரின் பெயர்கள் எனக்கு தெரியாது. நான் சொன்ன விதத்தில் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : குகனேஸ்வரி (Pw.12 )

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of March 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது நத்தகுளத்தில் வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 12வருடங்களுக்கு முன்பு திருச்சுழிக்கு ஒரு வேலையாக வந்துவிட்டு எனது ஊருக்கு செல்வதற்காக மாலை 3.30மணியளவில் திருச்சுழியில் எனது ஊருக்கு செல்லும் நத்தகுளம் அரசு பேருந்தில் ஏறினேன். என்னுடன் குழலிகுளம், நெடுகநேந்தல், பனையூர், ஆனைகுளம், அம்மன்பட்டி, ரெகுநாதமடை ஆகிய ஊர்களை சேர்ந்தவர்கள் பேருந்தில் ஏறிச் சென்றோம். நாங்கள் சென்ற பேருந்து சாமிநத்தத்திற்கும்

பனையூருக்கும் நடுவே சென்றபோது 3.45மணியளவில் நாங்கள் சென்ற பேருந்திற்கு எதிரே பனையூரிலிருந்து வந்து கொண்டிருந்த லாரி வேகமாக வந்து நான் சென்ற பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. அதனால் எனக்கு வலது கை, இடது பக்க நெற்றி ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. என்னுடன்பேருந்தில் வந்த 25 நபர்களுக்கு மேல் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு என்னை எனது அப்பா இரு சக்கர வாகனத்தின் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். மற்ற நபர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள். அன்றே சிகிச்சை முடித்து வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் சென்ற பேருந்தின் நடந்துநர் 2 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். ஆஜர் எதிரிதான் நான் சென்ற பேருந்தில் மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

விபத்தில் எனக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் இடது பக்க நெற்றியில் காயம் ஏற்பட்டது. பேருந்தில் 50, 60 பேர் பயணம் செய்திருப்போம். நான் பேருந்தில் உட்கார்ந்திருந்தேன். பஸ் மற்றும் லாரி மோதிய பின்னர் தான் விபத்து பற்றி தெரியும் என்றால் அவர் வரும் போதே நான் பார்த்துவிட்டேன். அவர் ஹாரன் அடித்தாரா என்றால் இல்லை. லாரியின் பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. லாரி மற்றும் பஸ்ஸின் பதிவு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரண்டு வாகனங்களின் ஓட்டுநர் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரண்டு ஓட்டுநர்களுக்கும் எங்கு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பஸ் மற்றும் லாரிக்கு என்ன இழப்பீடு

ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் பஸ்ஸில் கண்ணாடி உடைந்துவிட்டது. லாரிக்கு எந்த இடத்தில் சேதம் என்று எனக்கு தெரியாது. நான் சென்ற பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், நான் மற்ற சாட்சிகளின் பேச்சைக்கேட்டு பொய்யாக எதிரியின் கவனக்குறைவுதான் விபத்திற்கு காரணம் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து பற்றி எனக்கு தெரியாததால் தான் போலிசார் விசாரணையில் ஆம்புலன்ஸில் சென்றதாகவும், முதல் விசாரணையில் இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,<br>
நீதித்துறை நடுவர்,<br>
திருச்சுழி.